# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 02 | 16-05-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 87



தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்

கணேசா நகையகம்

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா.

(சி-7865)






- டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதாயின் -

# எமது மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய அரசின் உறுதிப்பாடுகள் எங்களுக்குத் தேவை!

## நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**நாம் டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்வதானால் எமது மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய உறுதிப்பாடு எங்களுக்குத் தேவை. இலங்கை அரசிற்கு நிதி சேர்த்துக்கொடுப்பது எமது வேலையல்ல. அதேவேளை, டோக்கியோ மாநாட்டை பிற்போடுமாறு நாம் கோரவுமில்லை என நேற்று தம்மைச் சந்தித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனிடம் தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.**

நேற்றைய தினம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமயிலான நோர்வே குழுவினருக்கு தமழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இதனைத் தெரிவித்தார். இச்சந்திப்புக் குறித்து மேலும் அவர் செய்தியாளரிடம் பேசுகையில்,

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அரசு, புலிகளின் நிலைப்பாட்டை அறிவதே எனது விஜயத்தின் நோக்கம்

### நோர்வே வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(அலுவலக நிருபர்)

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான இரு தரப்பினரதும் தற்போதைய நிலைப்பாடுகளை அறிந்து கொள்வதே தனது தற்போதைய விஜயத்தின் நோக்கம் என நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் செய்தியாளருக்குத் தனது விஜயம் குறித்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களையும் சிறிலங்கா பிரதமரையும் சந்தித்து அவர்களது நிலைப்பாடு தொடர்பாக கலந்துரையாடியதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் கலந்து கொள்வதில் இருந்து விலகிவிடக்கூடாது என்றும் ஜான் பீற்றர்சன் தெரிவித்து ள்ளார்.

மேற்படி மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளாமை மற்றும் சமாதானப் பேச்சுக்களில் தற்காலிகமாக விலகியுள்ளமை தொடர்பாக நேற்று தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## ம.நே.க.பிரிவின் நடவடிக்கையை நோர்வே அமைச்சர் பார்வையிட்டார்

(அலுவலக செய்தியாளர்)

நோர்வே வெளிவிகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் நேற்று இயக்கச்சிப் பகுதியில் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் வேலைத் திட்டங்கள் தொடர்பாக நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

முன்னதாக சிறிலங்கா உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை காலை 8.45 மணிக்கு வந்தடைந்த இவர்கள் நேரடியாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிறைவேற்றுப் பணிமனைக்கு வருகை தந்தனர். அங்கு பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன். தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறை

(IV ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இல் மரணமடைந்த நோயாளிக்கு சார்ஸ் நிமோனியா இல்லை

யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் நிமோனியா நோயினால் மரணமடைந்த நோயாளிக்கு சார்ஸ் நிமோனியா ஏற்பட்டிருக்கவில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சார்ஸ் நோய் பீடிக்கப்பட்டிருப்பதாக சந்தேகத்தின் பேரில் கடந்த 12 ஆம் திகதி மேற்படி நோயாளி அனுமதிக்கப்பட்டிருந்தார். இதுபற்றி விசாரணை நடத்தும் முகமாக சிறிலங்கா சுகாதார சேவை

(IV ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் - கதிர்காமர் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் முறுகல் நிலையைக் களைவது குறித்தும் சகவாழ்வு அரசியலைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தும் சிறிலங்கா சனாதிபதியின் அரசியல் ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமரை சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

இதற்கிடையே அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி பொறுப்பேற்றுள்ள பிரச்சினை குறித்து முக்கிய பிரமுகர்களுடன் ஆராய்ந்து வருவதாகப் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

- அரசு - சனாதிபதி பலப்பரீட்சை -

## உயர் நீதிமன்றத்தின் உதவியை சட்டத்தரணிகள் குழு நாடுகிறது

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் அமைப்பு அதிகார பலப்பரீட்சையை முடிவுக்குக் கொண்டுவர உயர் நீதிமன்றத்தின் சட்ட உதவியைப் பெற சட்டத் தரணிகள் குழு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையை தனது நேரடிக் கண்காணிப்பில் கொண்டு வந்துள்ள சனாதிபதி அதனை வாபஸ் பெறப் போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்த நிலையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் விவகாரக்குழுவினர் நேற்று கிளிநொச்சி திரும்பினர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் தமது இரண்டாவது சுற்றுப் பயணத்தை நிறைவு செய்து நேற்று கிளிநொச்சியை வந்தடைந்துள்ளனர்.

கடந்த மாதம் இருபத்து நான்காம் திகதி ஐரோப்பிய நாடுகளுக்கான தனது பயணத்தை ஆரம்பித்தது. இக்குழுவினர் ஜேர்மன், ஸ்பெயின், சுவிஸ்லாந்து, பெல்ஜியம் ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கு பயணத்தை மேற்கொண்டிருந்தனர். (லோ)

# வன்னியில் நோர்வே வெளிவிவகார அமைச்சர்



நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரால் அழைத்து வரப்படுகின்றனர்.



தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு.








இயக்கச்சியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டபோது...


## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, டலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள்.
ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி. (3256)


## சமாதானத்தை விரும்பாத சக்திகளே மட்டு.வில் வன்முறையில் ஈடுபடுகின்றன

### மட்டு, அம்பாறை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்

சமாதானத்தை விரும்பாத சக்திகளே மட்டக்களப்பு நகரில் வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கிருஷன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெறுகின்ற வன்முறைச் சம்பவங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலே நடைபெறுவதாக தெரிவித்த அவர் அப்பகுதிகளில் விடுதலைப்புலிகள் நிராயுதபாணிகளாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானத்திற்கு விரோதமான சக்திகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் செவ்வாய்க்கிழமை புளொட் உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென அவர் கூறியுள்ளார்.

## கண்டெடுப்பு

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சிறுபிள்ளையின் மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இம் மோதிரத்திற்கு உரியவர்கள் தகுந்த அடையாளத்துடன் மாவட்ட வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளவும். (20)

## முதலாம் இடம்

கடந்த 01.05.2003 அன்று மல்லாவியில் நடைபெற்ற மேதின நிகழ்வில் பசுந்தளிர் விணாடி வினாப் போட்டி நடைபெற்றது. இதில் மாங்குளம் ஒலுமடு கமக்கார அமைப்பு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. (05)

## மாங்குளம் - முல்லைத்தீவு வீதியில் பேருந்து சேவையை அதிகரிக்கக் கோரல்

மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்கு மக்கள் செல்வதற்கு பேருந்து சேவை இன்மையால் மக்கள் பெரும் சிரமங்களையடைகின்றனர்.

புளியங்குளத்தில் இருந்து மாங்குளம் ஊடாக புதுக்குடியிருப்பு செல்லும் பேருந்து 12.00 மணியளவில் செல்வதால் கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடு, அம்பகாமம், மாணவாளன்பட்ட முறிப்பு, மாங்குளம் பகுதி மக்கள் முல்லைத்தீவு அரச செயலகம் சென்று திரும்புவதற்குப் பெரும் சிரமத்தை அடையவேண்டியுள்ளது. எனவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையினை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (05)

## சின்னச் சாளம்பன் கிராமத்தில் 'அன்பழகன்' முன்பள்ளி திறப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடன் 'அன்பழகன்' முன்பள்ளி சின்னச்சாளம்பன் கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி 11.00 மணியளவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் வே. தயாபரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை அன்பழகன் முன்பள்ளி அபிவிருத்திச் செயலாளர் வி.தம்பிராசா ஏற்றினார். தேசியக் கொடியினை பிரதேசப் பொறுப்பாளர் லோ.சின்னக்கிளி ஏற்றினார். முன்பள்ளிக் கொடியினை ஆசிரியை செல்வி லீனா ஏற்றினார்.

மங்கல விளக்கினை ஒட்டுசுட்டான் கமக்கார அமைப்புத் தலைவர் நா.குலசிங்கம், கிராமத் தலைவர் பாலஜெயந்தி ஆகியோர் ஏற்றிவைத்தனர். பெயர்ப் பலகையினை முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் செ.சஞ்சீவன் திரைநீக்கம் செய்து வைத்தார். முன்பள்ளியின் நாடாவினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டப் பொறுப்பாளர் இ.மாறன் வெட்டித் திறந்து வைத்தார்.

கருத்துரைகளை மாவட்டப் பொறுப்பாளர் இ.மாறன், லோ.சின்னக்கிளி, கிராம உத்தியோகஸ்தர் சிவராசா ஆகியோர் ஆற்றியதைத் தொடர்ந்து மரக்கன்றுகளை சம்மளங்குள முன்பள்ளி ஆசிரியை ஒட்டுசுட்டான் முன்பள்ளி ஆசிரியை ஆகியோர் நாட்டினர். (05)

## உடத்தலவின்ன படுகொலை சந்தேக நபரின் சுகவீனத்தில் நீதிமன்றம் சந்தேகம்

(கொழும்பு)

உடத்தலவின்ன மனிதப் படுகொலைச்சம்பவத்தின் 12 ஆவது சந்தேக நபரான மகிந்த திசாநாயக்க என்பவருக்கு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டமை தொடர்பான அறிக்கையை இரகசியப் பொலீசார் பெற்றுள்ளனர்.

இந்த வழக்கை விசாரித்து வரும் மூன்று நீதிபதிகள் அடங்கிய கொழும்பு மேல் நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச்சந்தேக நபர் கடந்த வாரம் தாம் சுகயீனம் அடைந்திருப்பதாகக் கூறி சிறைச்சாலை வைத்தியசாலையிலும் தேசிய வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றார். இதனால் வழக்கு விசாரணை பின்போடப்பட்டது.

ஆயினும் இந்தச் சந்தேக நபரை பரிசோதனைக்குட்படுத்திய கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி இந்த சந்தேக நபர் நோய்வாய்ப்படடிருக்கவில்லை என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலென்று மூன்று நீதிபதிகள் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## ஈ.பி.டி.பி. அலுவலகங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

வட-கிழக்கு மாகாணத்திலிருக்கின்ற ஈ.பி.டி.பி. அலுவலகங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அலுவலகத்திலும் இரண்டு பொலிசார் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருப்பதாகவும் ஈ.பி.டி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மூன்று பொலிசார் வீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கரைதுறைப் பற்று ப.நோ.கூ.சங்க உப பணிமனைக்கு நிதி ஒதுக்கீடு

கரைதுறைப் பற்று ப.நோ.கூ. சங்கத்திற்கு உப பணிமனை அமைப்பதற்கென வன்னி புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் 10 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

வெதுவிரைவில் முல்லைத்தீவு மருதடிச்சந்தியில் இப்பணிமனை அமைக்கப்படவுள்ளது என ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார். (02)

# இந்திய-பாக். பிரச்சினைக்கு தீர்வு காண்பதில்

# மூன்றாவது தரப்பிற்கு இடமேயில்லை

## அமெரிக்காவிடம் இந்தியா எடுத்துரைப்பு

**இந்திய - பாகிஸ்தான் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மூன்றாவது தரப்பிற்கு இடமேயில்லை என்று இந்தியா அமெரிக்காவுக்கு உறுதிபட எடுத்துக் கூறியுள்ளது.**

எல்லை கடந்த பயங்கரவாதத்தைப் பாகிஸ்தான் கைவிடச் செய்வதில் மட்டுமே அமெரிக்காவுடனோ அல்லது எந்த நாட்டுடனோ பேசுவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மொஸ்கோவில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கா, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலுடன் பேசிய போது இவ்வாறு வலியுறுத்திய தாக ஜஸ்வந்த சிங்கா செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

எல்லை கடந்த பயங்கரவாதத்தை நிறுத்தும்படி, பாகிஸ்தானை நிர்ப்பந்தித்து வருவதாக அமெரிக்கா இந்தியாவுக்குக்கூறி வருகின்றது.

ஆனால், அதை அறிய அளவுகோல் எதுவும் இல்லை. அமெரிக்காவின் வார்த்தை நம்பிக்கை தருவதாக இருக்கின்றது. ஆனால், யதார்த்த நிலைமை அவ்வாறு இல்லை என்றார் ஜஸ்வந்த் சிங்கா.

இதற்கு மாறாக, இப்பிரச்சினைக்கு ரஷ்யா முழு ஆதரவு அளித்து வருவதாக யஸ்வந்த சிங்கா கூறியுள்ளார்.

எல்லை கடந்த பயங்கரவாதத்தால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையை முழுவதுமாக ரஷ்யா புரிந்து கொண்டுள்ளது. இந்தியாவுக்கு அசையாத ஆதரவு அளித்து வருவதாகவும் சிங்கா கூறியுள்ளார்.

அத்துடன், பாதுகாப்பு, வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு உட்பட பல்வேறு இரு தரப்பு விடயங்கள் குறித்தும் இரு அமைச்சர்களும் விவாதித்துள்ளனர்.



சவூதி – றியாத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட காரும், சேதமடைந்த கட்டடங்களும்.

# காஷ்மீர் விவகாரத்தில் பாக். கொள்கையில் மாற்றமில்லை

## பாக். பிரதமர் தெரிவிப்பு

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே அண்மைக் காலமாக அமைதி முயற்சிகள் தொடர்ந்துள்ள போதிலும், காஷ்மீரைப் பொறுத்தவரை பாகிஸ்தானின் கொள்கையில் மாற்றம் எதுவும் கிடையாது என்று பிரதமர் ஜமாலி கூறியுள்ளார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் பாகிஸ்தான் தற்போது காஷ்மீர் பிரச்சினையை நிறுத்தி வைக்கக்கூடும் என்று தொடர்புசாதனங்கள் கருத்துக் கூறியுள்ள நிலையில், ஜமாலி இவ்வாறு கூறியுள்ளார்

# ரயில் பெட்டிகள் தீப்பிடித்து எரிந்தன 38 பேர் கருகிப்பலி; 13 பேர் காயம்!

பஞ்சாப் லூதியானா அருகே ரயிலில் தீப்பிடித்ததில் 38 பேர் பலியாகியுள்ளனர். மும்பையிலிருந்து அமிர்தசரஸ் நோக்கிச் சென்று கொண்டிருந்த கோல்டன் ரெம்பிள் எக்ஸ்பிரஸின் 04 பெட்டிகள் நேற்று அதிகாலை தீப்பிடித்துக் கொண்டதினால் 38 பேர் இறந்துள்ளனர். 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. லூதியானா அருகே லதோவால் எனுமிடத்தில் இந்த விபத்து நடந்துள்ளது.

இந்த விபத்திற்கு சதிவேலைகள் காரணமில்லை என்று ரயில்வே அமைச்சு அதிகாரி கூறியுள்ளார்.

மின் கோளாறு காரணமாகவோ, பயணிகள் எடுத்து வந்த எளிதில் தீப்பற்றக்கூடிய பொருளாலோ இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பூர்வாங்க விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஒரு பெட்டி முழுவதும் உருகிப் போனதாகவும், பல சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு கருகிப் போனதாகவும் கூறப்படுகின்றது.

# இந்தியாவுடன் உறவுகளை வலுப்படுத்த அமெரிக்க அரசாங்கம் விருப்பம்

உலகின் மிகப் பெரிய சனநாயக நாடான இந்தியாவுடன் உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், விரிவாக்கவும் அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை வாஷிங்டனில் நேற்று முன்தினம் பேசிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் காண்டலிஸா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவுக்கு நல்ல ஒத்துழைப்பு அளித்து வருவதாக புஷ் கூறியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# மத்திய பிரதேச சட்டப்பேரவை தேர்தலில் காங். உடன் கூட்டணியில்லை

## இந்திய கம்யூனிஸ்ட் தெரிவிப்பு

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சதீஸ்கார் மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி சேரப் போவதில்லை என இந்திய கம்யூனிஸ்ட் கூறியுள்ளது.

இதுபற்றி புதுடில்லியில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் ஏ.டி.பர்த்மன், பா.ஜ.கட்சியை தோற்கடிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். ஆனால் காங்கிரசுடன் கூட்டணி சேரப் போவதில்லை என்று கூறியுள்ளார்.



பெசாவரிலுள்ள ஆப்கான் அகதி முகாமிலிருந்து ஆப்கானிஸ்தான் திரும்பக் காத்திருக்கும் பெண்களும், குழந்தைகளும்.

# மாநில அரசுகளைக் கலைக்கும் 356 வது சட்டப்பிரிவு குறித்து ஆராய்வு

மாநில அரசுகளை கலைக்க வகை செய்யும் 356 வது சட்டப்பிரிவை தவறாக பயன்படுத்துவதைத் தவிர்க்க, இதில் தகுந்த மாற்றங்கள் கொண்டுவரப்படும் என துணைப்பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.

மத்திய மாநிலங்களின் மன்றத்தின் ஒன்பதாவது நிலைக்குழுக் கூட்டம் புதுடில்லியில் துணைப் பிரதமர் அத்வானி தலைமையில் நடைபெற்றுள்ளது.

மத்திய பிரதேசம் மேற்கு வங்காளம், ஜம்மு காஷ்மீர், அஸாம், கேரளா, ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

கர்நாடக மாநிலத்தின் சார்பில் அதன் உள்துறை அமைச்சர் மல்லிகா அர்ஜுன கார்கே கலந்து கொண்டுள்ளார்.

மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் பற்றியும், மாநிலங்களுக்கிடையேயான நிர்வாகத் தொடர்புகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

செய்தியாளர்களிடம் பேசிய அத்வானி மாநிலங்களில் குடியரசுத் தலைவர்களின் ஆட்சியைப் பிரகடனப்படுத்துவதற்கான அரசியல் சாசனத்தின் 356 வது பிரிவைத் தவறாகப் பயன்படுத்துவதை தவிர்க்கவும், தடுக்கவும் இக்கூட்டம் விவாதித்திருக்கின்றது என்று கூறியுள்ளார்.

ஆயினும், மாநிலங்களுக்கு மத்திய படைகளை அனுப்பு வதற்கு முன்பாக அந்தந்த மாநிலங்களுடன் ஆலோசனை நடத்தப்பட வேண்டும் எனும் கோரிக்கையை அவர் ஏற்கமறுத்துவிட்டார்.

ஆனாலும் இப்பிரச்சினையை அடுத்து நடைபெறும் கூட்டத்தில் விவாதிப்பது என முடிவு எடுக்கப்பட்டதாக திரு. அத்வானி கூறியுள்ளார்.

# பூநகரிப் பிரதேச செயலகத்தில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை!

(அலுவலக செய்தியாளர்)

பூநகரிப் பிரதேச செயலகத்தில் போதிய ஆளணி இன்மையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பிரதேசசெயலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தர், கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எவரும் இல்லாத நிலையிலேயே இயங்கி வருகிறது.

இந்நிலையால் இப்பகுதி மக்கள் தமது வேலைகளைச் செய்வதற்காகப் பல நாட்கள் அலைய வேண்டியுள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கையால் பேருமடி செயலகம் ஜெயபுரத்தில் இயங்கி வந்தது. தற்போது மீண்டும் தனது சொந்த இடமாகிய வாடியடியில் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

# மாணவர் எழுச்சிநாள் அறிவுறுத்தல் கூட்டங்கள்

(அலுவலக செய்தியாளர்)

மாணவர் எழுச்சிநாள் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் கோட்டரீதியாக நடைபெற ஏற்பாடாகியுள்ளதெனத் தெரியவந்துள்ளது.

பூநகரிக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு ஜெயபுரம் அ.த.க. பாடசாலையிலும், பளைக் கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி காலை 10.00 மணிக்கு வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையிலும் நடைபெறவுள்ளதென கிளி. வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

(சோ)



தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் – நோர்வே வெளிவிவகார அமைச்சர் சந்திப்பின் போது........

### அரசு....

களை கிளிநொச்சியில் சந்தித்து உரையாடிவிட்டு நேற்று மாலை பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியில் வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும்போது,

இந்த மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் செல்லாதுவிட்டால் அவர்கள் சர்வதேச சமூகத்திற்கு இந்த விடயம் பற்றி விளக்க வேண்டியது அதிகம் இருக்கின்றது என நினைக்கின்றேன.

டோக்கியோவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகள் ஒட்டு மொத்தஅமைதிவழி முறையின் ஒரு பகுதிதான். ஆனால், அது ஒரு முக்கியத்துவமான பகுதி. ஏனென்றால், அமைதி வழிகளில் சர்வதேச சமூகத்தின் ஆதரவை உறுதிப்படுத்த முடியும் என்றார் பீற்றர்சன்.

சர்வதேச கவனத்தை ஈர்ப்பது என்று வந்தால் ஏராளமான போட்டி நிலவுகின்றது.ஈராக் இந்த விடயத்தில் இயற்கையாகவே சர்வதேச அளவில் மிகவும் அதிகமாக கவனத்தை ஈர்த்துள்ளது.

பலஸ்தீனம், ஆப்கானிஸ்தான் மற்றும் ஆபிரிக்கா என அங்கிருக்கும் பல நாடுகள் சர்வதேச கவனத்தில் இருக்கின்றன. எனவே இதனால்தான் இலங்கையின் இரண்டு தரப்பினரும் டோக்கியோ மாநாட்டிற்குச் செல்ல வேண்டியது அவசியம். அவர்கள் இதைத் தவறவிடக்கூடாது. இந்த கருத்தைத்தான் நான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களிடம் எடுத்துக் கூற முயன்றேன் என்றார். (லோ)

### உயர்....

அதேவேளை இந்த விவகாரத்தில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்காது எனத் தெரிவித்துள்ளது.

இதனால் ஏற்பட்டுள்ள அரசியல் அமைப்பு அதிகார பலப் பரீட்சையை முடிவுக்கு கொண்டு வரவே சட்டத்தரணிகள் குழு உயர் நீதி மன்றத்தின் உதவியை நாட விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

### ம.நே.கண்.....

வேற்றுப் பணிப்பாளர் றெஜி. நிறுவனத் திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் திலகர் ஆகியோருடன் கலந்துரையாடி மக்களின் மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பாகக் கேட்டறிந்தனர். கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டை நேரடியாகப் பார்வையிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக இவர்கள் இயக்கச்சிப்பகுதியில்மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் வேலைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், மீள் குடியமர்வு நடவடிக்கைகள் பற்றியும், கேட்டறிந்துள்ளனர். அத்துடன் மீள் குடியமர்வு தாமதத்துக்கான காரணங்கள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டதுடன் கடந்த வருடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்கடந்த பணி கள் பற்றியும் அவர்கள் எதிர் கொண்டசிக்கல்கள் தொடர்பாகவும் கேட்டறிந்தனர். (லோ)

### யாழ்.....

பணிப்பாளர் நாயகம் டாக்டர் அத்துல சுகந்த லியனகே தலைமையிலான மருத்துவக் குழுவொன்று யாழ்ப்பாணம் சென்றிருந்தது. இறந்தவரின் உடலின் பாகங்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### எமது......

நோர்வே வெளிவிவகார அமைச்சருககும், தேசியத்தலைவர் அவர்களுக்கும் இடையிலான உத்தியோக பூர்வ சந்திப்பில் பல ஆக்கபூர்வமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக யுத்த நிறுத்த உடன்பாடு எற்பாடு ஒருவருட காலத்தைத் தாண்டியுள்ள போதும், மக்களின் வாழ்வில் இயல்பு நிலை ஏற்படுத்தப்படவில்லை. தவிர, புனர்வாழ்வுப்பணிகள் எவையும்நடைபெறவில்லை. நீண்டகாலமாக நடந்த யுத்தத்தினால் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அடிப்படைக் கட்டுமானங்கள் பெரிதும் சிதைந்துபோயுள்ளன. இவ்வாறு இருந்தும் இவை குறித்த எத்தகைய வேலைதிட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என்பவை தேசியத் தலைவரினால் சுட்டிக்காட்டப்பட்டன இந்நிலையானது மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளமையும் தெளிவுபடுத்தப்பட்டது.

## அரசின் முட்டுக்கட்டையால் சிரான் சரியாகச் செயற்படவில்லை

அடுத்த முக்கிய விடயமாக சிரான் அமைப்புப் பற்றிப் பேசப்பட்டது. கடந்த ஆறு மாத காலமாக அரசாங்கம் போட்ட பல முட்டுக்கட்டைகள் காரணமாக இவ் அமைப்புச் சரியாகச் செயற்படவில்லை. இதனுடய நிதியம் உலக வங்கியின் கீழ் இயங்குகின்றது. ஆயினும் இது சரியாகச் செயற்பட முடியாமல் போனமை தொடர்பாகவும் தேசியத்தலைவர் அவர் கள் தெளிவாக எடுத்துக் கூறினார்.

இதேவேளை, ஓராண்டிற்கு மேலாகியும் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை நோர்வே தரப்பும் ஒப்புக்கொண்டது. அத்தோடு அரசாங்கத்தரப்புடன் பேசி ஆக்கபூர்வமான நடவடிக்கையினை எடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

## அதிகாரமுள்ள கட்டமைப்பை நிறுவாது உதவி கோருவதில் பிரயோசனமில்லை

அடுத்ததாக ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டபோது அதற்கு எமது தேசியத்தலைவர் தெளிவான விளக்கம் ஒன்றை அளித்தார்.

நாம் சர்வதேச சமூகத்தினடம் உதவி கோரிச்செல்லும்போது இங்கேயொரு நிர்வாக அதிகாரமுள்ள ஒரு கட்டமைப்பை நிறுவாமல் அதற்கான அதிகாரவரையறைகளைப் பெற்றுக் கொள்ளாமல் நாங்கள் அதில் கலந்து கொள்வது பிரயோசனமற்றது. மேலும் நாங்கள் பெறப் போகின்ற உதவிகள் எமது தாயகத்திலுள்ள எமது மக்களுக்குப் பிரயோசனப் படக்கூடிய அதிகாரமுள்ள ஒரு நிர்வாக அலகை நாம் உருவாக்காமல் நாம் சர்வதேச சமூகத்திடம் உதவி கோருவது என்பதை சர்வதேச சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என நாம் கருதவில்லை. இதேவேளை இலங்கை அரசிற்கு நிதி சேர்த்துக் கொடுப்பது என்பது எமது வேலையுமல்ல. நாம் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதானால் எமது மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய உறுதிப்பாடு எங்களுக்குத் தேவை என்பது மிகத தெளிவாக முன் வைக்கப்பட்டது. மேலும், உதவி வழங்கும் மாநாட்டைப் பிற்போடுமாறு நாங்கள் கேட்கவில்லை. அவ்வாறு கேட்க வேண்டிய அவசியமும் எமக்கில்லை. ஏனெனில் நாம் கலந்து கொள்வதானால் அரச தரப்புடன் நாங்கள் பல இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியிருக்கின்றது. சில உறுதிப்பாடுகளை எடுக்க வேண்டியிருக்கின்றது. சர்வதேச சமூகம் தருகின்ற உதவி உண்மையாக வடக்கு - கிழக்கு மக்களுக்குச் சென்றடைய கூடிய சாத்தியப்பாடானதும் உறுதியுமானதொரு ஏற்பாடு இருக்க வேண்டியது அவசியம். எனவே இவ்வாறான ஏற்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு சர்வதேச சமூகத்திடம் நாம் இரு தரப்பும் செல்லலாம். இதனால் இன்றைய சூழ்நிலையில் நாம் அதில் பங்குபற்றுவது சாத்தியமில்லை. ஆகவே ஜப்பானில் நடைபெறவுள்ள மாநாட்டை பிற்போடுவது தொடர்பாக அரசு தான் கேட்கலாமே தவிர நாம் கேட்க வேண்டிய அவசியமில்லை.

சிரான் அமைப்பால் தேர்வு செய்யப்பட்ட 15 திட்டங்களில், பன்னிரண்டை அரசாங்கம் தன்னுடைய இயல்பான நிதி நடவடிக்கை மூலம்செய்வதாகக் கூறியிருப்பது அரசினது ஒரு பக்கச் சார்பான நடவடிக்கை. உண்மையிலேயே சிரான் அமைப்பை சிறப்பாக, திறமையாகச் செயற்பட வைக்கவேண்டுமானால் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். சிரான் திட்டங்களை ஒரு தலைப்பட்சமாக அரசு செயற்படுத்த முனைவதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் சிரான் அமைப்பு அதிகாரம் கொண்டதாக, மக்களுக்கு பயனளிக்கக் கூடிய நிர்வாக ஆற்றலுள்ள அமைப்பாகச் செயற்படாதவிடத்து நாங்கள் உதவி கோரப்போவது பொருத்தமில்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

## சாதகமான பதில் கிடைத்தால் முடிவை மறுபரிசீலனை செய்யலாம்

நாங்கள் பேச்சுவார்த்தைக்கான இடைநிறுத்தம் செய்துள்ளோமே தவிர பேச்சுவார்த்தையிலிருந்து விலகவில்லை. எங்களுடைய அரசியல் ஆலோசகர் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் எமது தலைமையினுடைய நிலைப்பாட்டை தெளிவாக விளக்கியுள்ளோம். அதற்கு சாதகமான பதிலை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். சாதகமான பதில் கிடைக்கின்றபோது தான் எங்களுடைய முடிவை நாங்கள் மறுபரிசீலனை செய்யக்கூடியதாக இருக்கும்.

ஒஸ்லோவிலே நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் வடக்கு - கிழக்கிற்கு அவசர மனிதாபிமான தேவைகளுக்காக 70 மில்லியன் டொலர் தருவதாக பல நாடுகள் உறுதியளித்தன. இந்த உதவியை எமது மக்களின் அவசர புனர்வாழ்வுப் பணிகளுக்குப் பெற்றுக் கொண்டு அதை நடைமுறைப் படுத்துவதற்கு கடந்த காலத்தில் இந்த 'சிரான்' அமைப்பு சிறப்பாக செயற்படாததும், இதை சிறப்பாக செயற்படுத்துவதற்குரிய நிதியத்தை செயற்பட வைக்க அரசாங்கம் இழுத்தடித்த காரணத்தால் இந் நிதிகள் சிரான் அமைப்புக்கு வந்து சேராது ஒரு பெரிய ஏமாற்றத்தை தந்திருக்கிறது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை நிச்சயமாக சமாதான முன்னெடுப்புக்களை உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கான சாத்தியப்பாடான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கான நிலைப்பாடு தான். ஆகவே இது சம்பந்தமாக அரசாங்கம் தனது தீவிர கவனத்தைச் செலுத்தி அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியது அரசின் பக்கமே இருக்கிறது.

## சனாதிபதி – பிரதமர் பிரச்சினை புதிதாக வந்த ஒன்றல்ல

சனாதிபதிக்கும், அரசிற்கும் இடையிலான பிரச்சினை புதிதாக வந்ததொன்றென நான் கருதவில்லை. அவ்வப்போது காலத்திற்குக் காலம் சந்திரிகா அம்மையார் இவ்வாறான தாக்குதல்களைச் செய்து கொண்டிருக்கிறார். ஆகவே தென்னிலங்கையில் நடக்கின்ற இந்த அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாக நாங்கள் கருத்துக்களைக் கூற முடியாது. ஏனெனில் அவை பற்றி எதிர்வு கூறக்கூடிய சூழ்நிலையிலும் நாங்கள் இல்லை. அதைத் தீர்த்துக் கொள்ள வேண்டியது சந்திரிகா அம்மையாரும் ரணில் விக்கிரமசிங்கவும் தான்.

அகாஷியை எமது தேசியத் தலைவர் சந்திக்கின்ற போது அவர் எமது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியிருந்தார். அரசு தரப்பு இதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பதன் ஊடாகவே நாங்கள் அது சம்பந்தமான முடிவைப் பரிசீலிக்கலாம் என்பது தான் அகாஷியிடம் தேசியத் தலைவர் முன் வைத்த கருத்து. ஆனால் நாங்கள் 16 ஆம் திகதிக்குள் முடிவை அறிவிப்போம் என்று எந்த உத்தரவாதமும் எந்த உறுதிமொழியும் அளிக்கவில்லை என்றார்.

இப்பேச்சுவார்த்தைகள் நேற்றுக் காலை 10.45 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடன், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், சட்ட ஆலோசகர் உருத்திரகுமார், திருமலை மாவட்ட விசேட தளபதி கேணல் பதுமன், மட்டு.அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா ஆகியோர் பங்குபற்றினர்.

நோர்வேத் தரப்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விதார் கெல்ஹேரசன், அரசியல் ஆலோசகர்,மாறிற் பேகிர் பேச்சாளர் சிலிஸ்பாக், சிறிலங்காவிற்கான நோர்வே உயர்ஸ்தானிகர் கன்ஸ்பீக்கர் இரண்டாவது காரியதரிசி ரொம்ஸ் ஏன்கிலன்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த நோர்வேக் குழுவினரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி, மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுப் பணிப்பாளர் பரணி ஆகியோர் வரவேற்றனர். (லோ)

### கலந்துரையாடல் அறிவித்தல்

ஈழநாதம் – வெள்ளிநாதம் தொடர்பான கலந்துரையாடல் 18.05.2003 ஞாயிறு காலை 10 மணியளவில் இடம்பெறும்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.